# திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை
## பிறப்பிப்பவர்: திரு. சு. சிவராசு, இ.ஆ.ப.,

**ந.க.எண்.பே2 / 2196 / 2019**

**நாள். 3 .09.2021**

பொருள் : பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திருச்சிராப்பள்ளி மண்டலம் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி – முன்னாள் அலுவலக உதவியாளர் – செந்தில்குமார் (திரு) ப என்பவர் 04.06.2021 அன்று பணியிடை காலமானது – வாரிசுதாரரும் மகனுமாகிய – திவ்ய பிரகாஷ் (திரு) செ என்பவருக்கு கருணை அடிப்படையில் வரித்தண்டலராக பணி நியமனம் வழங்கி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.800 ஊரக வளர்ச்சித் துறை நாள்.16.12.1988
2. அரசாணை எண்.205 ஊரக வளர்ச்சித் துறை நாள்.23.03.1989
3. அரசாணை எண்.271 ஊரக வளர்ச்சித் துறை நாள்.04.04.1990
4. அரசாணை (நிலை) எண்.206 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.11.1995
5. செயல் அலுவலர், தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சி கடித ந.க.எண்.101/2021/அ1 நாள்.23.07.2021
6. திரு. செ. திவ்ய பிரகாஷ், த/பெ. ப. செந்தில்குமார் என்பவரது மனு நாள்.10.08.2021
7. தொடர்புடைய ஆவணங்கள்.

----------

**ஆணை :–**

திருச்சிராப்பள்ளி மண்டலம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு. ப. செந்தில்குமார் என்பவர் கடந்த 04.06.2021 தேதியன்று பணியிடை காலமானதையடுத்து, தனியரின் வாரிசுதாரரும், மகனுமாகிய திரு. செ. திவ்ய பிரகாஷ் ன்பவருக்கு கருணை அடிப்படையில் தற்சமயம் சிறுகமணி பேரூராட்சியில் காலியாக உள்ள வரித்தண்டலர் பணியிடத்தில் ரூ. 19500-62000 (நிலை–8) (பழைய ஊதிய விகிதம் PB1ரூ.5200—20200 + தர ஊதியம் 2400) என்ற ஊதிய விகிதத்தில் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளுக்குட்பட்டு முற்றிலும் தற்காலிகமாக பணி நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

இப்பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது. எந்தவொரு தவறான தகவலின் பேரில் இப்பணி நியமனம் செய்யப்பட்டதாக பின்னர் தெரிய வந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றியும் பணி நியமனம் ரத்து செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது. அத்தகைய நேர்வுகளில் இவர் மீது சட்டப்படியான ஒழுங்கு நடவடிக்கையுடன் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

சம்பந்தப்பட்ட நபர் இப்பணி நியமன ஆணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரக் காலத்திற்குள் அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவரிடம் முழு உடல் தகுதிக்கான சான்றிதழ் பெற்று பணியிற் சேர வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

தனியர் பணியேற்றவுடன், தனியருடைய பணியேற்பு அறிக்கைகளை உடன் அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3/9/21

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

பெறுநர்

திரு. செ. திவ்ய பிரகாஷ்,
த/பெ. (லேட்) ப. செந்தில்குமார்,
233/1, கணபதி நகர் முதல் குறுக்குத் தெரு,
சண்முகா நகர், உய்யகொண்டான் திருமலை,
திருச்சிராப்பள்ளி – 620 102.

3/9/2021

3/9/21

நகல் : ஆணையர், பேரூராட்சிகளின் ஆணையரகம், சென்னை–28.
நகல் : செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை – 600 003.
நகல் : செயல் அலுவலர்கள், சிறுகமணி மற்றும் தாத்தையங்கார்பேட்டை பேரூராட்சிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.